**மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரையில் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 14,928,060 தொகை அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்படுத்தப்பட்ட சகல கடப்பாடுகளும் அட்டுறு செலவினத்தின் கீழ் பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | அட்டுறு செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்ட வாககொல்ல மிருககாட்சிசாலையின் முதலை பாதுகாப்பு அரண் நிர்மாணித்தலை மூலதனமாக்கும் போது அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,729,236 தொகையான ஆலோசனைக் கட்டண செலவினம் நடைமுறை வேலையான காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 722,650 தொகை பெறுமதியான பறவைகள் பிழையான இருப்பு மதிப்பீட்டினை பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 80,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டமையினால் பறவைகளின் பெறுமதி ரூபா 642,650 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பறவைகளின் இருப்பை மதிப்பிடுதல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் உள்நுழைவு பத்திர வருமானம் கணக்கீடு செய்யும் போது பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் பெறுமதி ரூபா 1,004,258 தொகை அதிகரித்து கணப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் உள்நுழைவு கட்டண வருமானம் மற்றும் பெறுமதிசேர் வரி மீதி என்பன அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சிற்றுண்டிச்சாலை வாடகை வருமானம் மற்றும் ஜீப் வண்டி வாடகை வருமானம் முறையே ரூபா 15,694,738 தொகை மற்றும் ரூபா 426,250 ஆக இருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 16,780,923 தொகை மற்றும் ரூபா 544,050 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக முறையே சிற்றுண்டிச்சாலை வாடகை வருமானம் மற்றும் ஜீப் வண்டி வாடகை வருமானம் ரூபா 1,086,185 இனாலும் ரூபா 117,800 இனாலும் அதிகரித்தும் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 1,203,985 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது பதிவழிப்பதற்கும் அதன் மூலம் இலாபத்திற்கு ஏற்பட்ட தாக்கங்களை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | முன்னைய ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்த போதும் பெறுமான தேய்வு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாத ரூபா 650,874,579 தொகையான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்காக செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தை நிதிக் கூற்றுக்களில் சீராக்கும் போது ரூபா 16,522,372 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்ட ரூபா 65,129,095 தொகையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 1,479,456 தொகை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வை சரியாக கணப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் மீதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி வைப்புக் கணக்கின் மீதிக்கும் திறைசேரி குறிப்புக்களில் காண்பிக்கப்பட்ட | 2,957,096,088<br>2,594,576,144 | 2,923,294,156<br>2,561,346,118 | 33,801,932<br>33,230,026 | வருடாந்த நிதிக் கூற்றுக்களின் மூலம் அந்த ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளுக்காக இணக்கக் கூற்று | வேறுபாட்டிற்கான காரணங்களை சரிசெய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆரம்ப மீதி மற்றும் இறுதி மீதிகளை ஒப்பீடு செய்யும் போது முறையே ரூபா 33,801,932 தொகை மற்றும் ரூபா 33,230,026 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | | ஒன்று சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம் . |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**1.6.1 பெறவேண்டிய பணம்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2019 செப்டெம்பர் 09 ஆம் திகதிய கடிதத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக மிருகக்காட்சிசாலைகளில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார கடைகள் 2019 ஏப்ரல் முதல் யூன் வரை மூடப்பட்டிருந்த காலப்பகுதிகளுக்குரிய கட்டணங்களை அறவிடல் தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 4,782,701 தொகையான நிலுவை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக அரச நிதி திணைக்களத்தினால் அமைச்சின் செயலாளருக்கு தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தமையினால் அந்த தீர்மானத்தை அறிவிக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 03 அவது நினைவூட்டலும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ)(ii) ஆம் பிரவு | போட்டியாளர் என மேம்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் மாதிரிகளை மீளாய்வு செய்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பணிப் பொறுப்புக்களாக இருந்த போதிலும் வெளிநாட்டு பறவைகளை கொள்வனவு | இலங்கையில் வீடு மற்றும் காட்சிப்படுத்தும் வகையில் வெளிநாட்டு பறவைகளை இறக்குமதி செய்தல் மற்றும் அதனை வளர்த்தல் என்பவற்றை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செய்வதற்காக பெறுகைகள் திட்டம் தயாரிக்கும் போது சகல பறவைகளும் வெளிநாட்டு பறவைகளாக இருந்தமை, இலங்கையில் உரிய வழங்கலகளை பூர்த்தி செய்யக்கூடிய வழங்குனர்களிடம் இருந்து வரையறுக்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்களின் காரணமாக உள்நாட்டு போட்டியாளர்களை வரையறுக்கும் இயலுமை தொடர்பாக மதிப்பீட்டு குழு கவனத்தில் கொண்டிருக்கவில்லை. | மேற்கொள்கின்ற வியாபாரிகள் இருக்கின்றமையினால் கேள்வியினை கோருவதற்காக போதிவயவான வழங்குனர்கள் இருந்தமை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அவதானிக்கப்பட்டிருந்தமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 409,287,647 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 75,889,902 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 485,177,549 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொவிட் - 19 தொற்றுநோயினால் மீளாய்வாண்டில் சில மாதங்கள் சகல மிருககாட்சிசாலைகளையும் மூடவேண்டியிருந்தமையின் காரணமாக வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 557,932,879 இனால் குறைவடைந்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உயிரின இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் பின்னவல யானைகள் சரணாலயத்தில் எந்தவொரு யானை குட்டியும் ஈன்று பெறப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உயிரின இனப்பெருக்கத்திற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரிதியகம சபாரி பூங்காவில் ரூபா 7.2 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 கிராமிய விற்பனை நிலையங்கள் 2018 மார்ச் 22 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த கிராமிய விற்பனை நிலையங்களை கேள்விதாரர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சொத்துக்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஒக்டோபர் 08 ஆம் திகதி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட பறவைகள் சரனாலயத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் உடன்படிக்கையின் பிரகாரம் 2020 மே 05 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பறவைகளை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் 2018 முதல் 2020 வரையான 2½ வருட அளவிலான காலமொன்று எடுக்கப்பட்டிருந்த போதிலும், காட்சிப்படுத்துவதற்கு இடமொன்று காணப்படாதிருந்தமையினால் 57 பறவைகள் காட்சிப்படுத்தப்படாமல் சபாரி பூங்காவில் தனிப்பட்ட கூடுகளில் வைக்கப்பட்டிருந்தது. | கொரோனா நிலைமையின் காரணமாக இறக்குமதிகள் தாமதமடைந்தமையினால் பறவைகள் சரணாலய நிர்மாணித்தலை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பறவைகளை காட்சிப்படுத்துவதற்கு ஆரம்பிக்க முடியுமென அறியத்தருகின்றோம். | பறவைகள் சரனாலயத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பறவைகள் காட்சிப்படுத்தலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு பறவைகளை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளின் போது "ஒரே வழங்குனர்களினால் 32 வகையான பறவைகளும் வழங்கப்பட வேண்டும்." என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு மாதிரிகள் குறிப்பிடப்பட்டதன் காரணமாக கேள்வி சமர்ப்பித்த மூன்று வழங்குனர்களில் இரண்டு வழங்குனர்களால் சில பறவைகளுக்காக மாத்திரம் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிராகரிக்கப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து சமர்ப்பிக்கப்பட்ட விலையினை விட அதிக விலையில் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து 53 பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 17,860,085 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இதன் போது காணப்பட்ட சகல விடயங்களுக்காகவும் விலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் மூலம் சமர்ப்பித்த மூன்று வழங்குனர்களுக்கு இடையில் இரண்டு பேர்கள் நிராகரிக்கப்பட்டிருந்த போதும் அந்த இரண்டு வழங்குனர்களும் நிராகரிப்பட்டமை அந்த நிபந்தனையினால் மாத்திரம் இல்லை என அறியத்தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |